செ.வெ.எண்:13

நாள்:06.01.2011.

## பத்திரிகை செய்தி

சென்னை மாவட்டம், ஜீவரத்தினம் நகர் மீனவர் கிராமத்திற்குப்பட்ட இந்திரா நகர் குடியிருப்புப் பகுதியில் வசித்து வந்த 4 மீனவர்கள் கடந்த 4.12.2010 அன்று அதிகாலை சுமார் 4.00 மணியளவில் சென்னை மீன்பிடித்துறைமுகத்திலிருந்து பைபர் படகில் (பதிவு எண்:TN02-FRPC-412) கடலில் தூண்டில் மீன்பிடிக்கச் சென்றனர். அவ்வமயம் ஏற்பட்ட கடல் சீற்றம் மற்றும் பெய்த தொடர் மழை காரணமாக பைபர்படகின் இயந்திரம் பழுதுற்று மேற்காணும் பைபர் படகு மற்றும் 4 மீனவர்கள் கடல் நீரோட்டத்தில் அடித்துக் கொண்டு இலங்கை கடல் பகுதியைநோக்கி கடலில் இழுத்துச் செல்லப்பட்டனர். அந்நேரத்தில் இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீன்பிடி விசைப்படகு மீனவர்களால் காப்பாற்றப்பட்டு இலங்கை அரசிடம் மேற்படி 4 மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி 4 மீனவர்களும் இலங்கையிலிருந்து விமானம் மூலமாக இன்று (6.1.2011) சென்னை வந்தடைந்தனர். அவர்களை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்றார்கள். மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் மேற்காணும் 4 மீனவர்களுக்கும் நிவாரணத் உதவி தொகை வழங்கினார்கள்.

# காணாமல் போன மீனவர்களின் பெயர் விவரம்

a)

| | | |
|---|---|---|
| 1. | மீனவர் பெயர் | : திரு.ரமேஷ் |
| 2. | தகப்பனார் பெயர் | : கஜேந்திரன் |
| 3. | வயது | : 35 |
| 4. | விலாசம் | : இந்திரா நகர் குடிசைப்பகுதி காசிமேடு, சென்னை-13. |
| 5. | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | : ஜீவரத்தினம் நகர், மீ.கூ.சங்கம் |
| 6. | உறுப்பினர் எண்: | : 697 |

---

b)

| | | |
|---|---|---|
| 1. | மீனவர் பெயர் | : திரு.ஜெயகுமார் |
| 2. | தகப்பனார் பெயர் | : ராஜி |
| 3. | வயது | : 25 |
| 4. | விலாசம் | : இந்திரா நகர் பள்ளம் குடிசைப்பகுதி காசிமேடு, சென்னை-13. |
| 5. | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | : ஜீவரத்தினம் நகர், மீ.கூ.சங்கம் |
| 6. | உறுப்பினர் எண்: | : 310 (இணை உறுப்பினர்) |

---

c)

| | | |
|---|---|---|
| 1. | மீனவர் பெயர் | : திரு.தேசப்பன் |
| 2. | தகப்பனார் பெயர் | : பாண்டியன் |
| 3. | வயது | : 24 |
| 4. | விலாசம் | : இந்திரா நகர் குடிசைப்பகுதி காசிமேடு, சென்னை-13. |
| 5. | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | : தமிழ்நாடு மீனவர் நலவாரியம் |
| 6. | உறுப்பினர் எண்: | : 00193 |

---

d)

| | | |
|---|---|---|
| 1. | மீனவர் பெயர் | : திரு.ராஜேஷ் |
| 2. | தகப்பனார் பெயர் | : நாகராஜ் |
| 3. | வயது | : 25 |
| 4. | விலாசம் | : இந்திரா நகர் பள்ளம் குடிசைப்பகுதி காசிமேடு, சென்னை-13. |
| 5. | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் | : தமிழ்நாடு மீனவர் நலவாரியம் |
| 6. | உறுப்பினர் எண்: | : '00196 |

---

இயக்கு...
செய்தி, மக்கள் தொடர்புத் து...
சென்னை